தமிழர் உரிமைக்கான
குழுமம்

7 Eastvale Drive, Suite 207
Markham, Ontario L3S 4N8, Canada
info@tamilrightsgroup.org | + 1 (647) 833-2674

01 மாசி 2022

மாண்புமிகு இந்தியா பிரதமர் திரு. நரேந்திர மோடி
பிரதமர் அலுவலகம்
152 சவுத் பிளாக், ராய்சினா ஹில்
புது தில்லி 110011

மாண்புமிகு பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்களுக்கு,

தமிழர் உயிர்கள் பாரியளவில் அழிக்கப்பட்டதுடன், இராணுவ மோதல் முடிவுக்கு வந்து பதின்மூன்று வருடங்கள் நிறைவடைந்துள்ள நிலையில் நீதியான தீர்விற்காக ஈழத் தமிழர்கள் தொடர்ந்தும் பெரும் துன்பங்களை அனுபவித்தவாறு காத்திருக்கும் இந்த இக்கட்டான தருணத்தில், ஈழத் தமிழர்களின் நியாயமான அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்கான தீர்மானமொன்றை முழுமையாக அமுல்படுத்துவதற்கு இலங்கை அரசாங்கத்தால் அர்த்தமுள்ள நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கப்படுவதை உறுதிசெய்ய, இந்தியா தனது பிராந்திய தலைமைத்துவத்தையும் செல்வாக்கையும் பயன்படுத்த வேண்டியது அவசியமாகும்.

அத்தகைய தீர்மானம், இலங்கையில் ஈழத் தமிழர்களின் பாதுகாப்பு, அமைதி மற்றும் மேம்பாட்டிற்கு உத்தரவாதம் அளிக்கும் அதே வேளையில், அடிப்படைக் கொள்கைகளை ஏற்றுக்கொள்வதற்கான உண்மையான அர்ப்பணிப்பின் அடிப்படையில் இருப்பதுடன் அதிகாரத்தைப் பகிர்வதற்கான பயனுள்ள திட்ட வரைபின் மூலம் வலுப்படுத்தப்பட வேண்டும்.

ஐயா! இந்தியாவின் புகழ்பெற்ற ஜனநாயக மற்றும் மனிதாபிமான மரபுகள் இது தொடர்பில் ஒரு முக்கிய பங்கை வகிக்க முடியும் என்ற உறுதியான நம்பிக்கையுடன், நாம் இம்மடலை வரைகிறோம்.

ஈழத் தமிழர்களின் உடனடி மற்றும் நீண்டகால துன்பங்களைப் போக்க உதவுவதற்கு நேரடியாகவும் அவசரமாகவும் செயல்படுமாறு நாங்கள் உங்களை வேண்டுகிறோம். ஒத்த எண்ணம் கொண்ட, ஏனைய நாடுகள், ஐநா அமைப்புகள் மற்றும் சர்வதேச சமூகத்தின் ஆதரவுடன் ஈழத் தமிழர் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காண இந்தியா வழிவகுக்க முடியும் என்று நாங்கள் நம்புகிறோம்.

**தமிழர் உரிமைக் குழு**

தமிழர் உரிமைக் குழு (TRG) என்பது ஒரு இலாப நோக்கற்ற மனித உரிமைகள் அமைப்பாகும், இது கனடாவின் மார்க்கம் நகரில் தலைமையகத்தைக் கொண்டு, இலங்கையில் உள்ள எமது மக்களுக்கு நிலைமாறுகால நீதி மற்றும்

7 Eastvale Drive, Suite 207
Markham, Ontario L3S 4N8, Canada
info@tamilrightsgroup.org | + 1 (647) 833-2674

நிலையான தீர்வைப் பெற்றுக்கொள்வதற்கான தேடலில் ஈழத் தமிழர்களை ஆதரிப்பதற்கும் பிரதிநிதித்துவப்படுத்துவதற்குமாக உலகளாவிய ரீதியில் செயற்பட்டு வருகிறது.

ஈழத் தமிழர்கள் தங்கள் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யவும், இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள அவர்களின் பாரம்பரிய தாயகத்தில் அமைதி, பாதுகாப்பு மற்றும் கண்ணியத்துடன் வாழவும் உதவும் அர்த்தமுள்ள மாற்றத்தை ஏற்படுத்துவதற்கும் எங்கள் தாயகத்தின் சிவில் சமூகத்துடன் இணைந்து பணியாற்றுவதுடன், உலகளாவிய இராஜதந்திரத்தின் மூலம் ஒரு நியாயமான தீர்வைப் பெற்றுக் கொள்ளவும், சர்வதேச சட்டத்தில் இருக்கும் சட்ட வழிகள், மற்றும் மனித உரிமைக் கோட்பாடுகளை நாம் இடைவிடாது பின்பற்றி வருகிறோம்.

நவம்பர் 2021 இல், ரோம சாசனதின் 15 ம் பிரிவின் கீழ், சர்வதேச குற்றவியல் நீதிமன்ற (ஐசிசி) வழக்குரைஞரின் அலுவலகத்திற்கு, “அரச தரப்புகளின் எல்லைகளுக்குள் ஈழத் தமிழர்களுக்கு எதிராகச் இழைக்கப்பட்ட நாடு கடத்தல் மற்றும் துன்புறுத்துதல்”  போன்ற மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள் பற்றிய பூர்வாங்க விசாரணையைக் கோரிய ஒரு முக்கிய தகவல்தொடர்பு ஆவணம் ஒன்றைச் சமர்ப்பித்தது நாம் முன்னெடுத்துள்ள பணிகளில் ஒன்றாகும். (இது பற்றிய விபரங்களை https://www.tamilrightsgroup.org/icc-campaign)

## ஈழத் தமிழர் பிரச்சினைக்குரிய தீர்வுக்கான முன்மொழிவு

1948 இல் பிரித்தானியாவிடம் இருந்து இலங்கை சுதந்திரம் பெற்றதிலிருந்து, தமிழர்கள் தங்களின் நியாயமான குறைகளை வெளிப்படுத்தவும், தங்களின் சுயநிர்ணய உரிமையைப் பயன்படுத்தவும் போராடி வருகின்றனர். தமிழர்கள் செழிக்கவும் அவர்களின் அபிலாஷைகளை நிறைவேற்றவும் அனுமதிக்கும் அதே வேளையில், அமைதி மற்றும் பாதுகாப்பிற்கு உத்தரவாதம் அளிக்கும் உறுதியான நோக்கங்களுடன் செயல்படுத்தப்படும் அரசியல் மற்றும் அரசியலமைப்பு சீர்திருத்தங்களை நாங்கள் நம்புகிறோம், அடுத்தடுத்து வந்த இலங்கை அரசாங்கங்களின் நிறைவேற்ப்படாத வாக்குறுதிகள் இருந்தபோதிலும், இத்தகைய சீர்திருத்தங்களின் முக்கிய தேவை இந்தியா மற்றும் சர்வதேச சமூகத்தால் நீண்டகாலமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் நன் முயற்சியால்; முன்மொழியப்பட்டு ஜூலை 1987 இல் கைச்சாத்திடப்பட்ட இந்திய-இலங்கை ஒப்பந்தம் ஒரு நியாயமான தீர்வினைக் கொண்டுவருவதற்கான தீவிர முயற்சியை மேற்கொண்ட ஒரே கருவியாக உள்ளது. எவ்வாறாயினும், இந்த ஒப்பந்தத்தின் மூலம் வழங்கப்பட்ட வாய்ப்பானது, பின்னர் 13வது அரசியல் யாப்புத் திருத்தத்தின் முறையற்ற

7 Eastvale Drive, Suite 207
Markham, Ontario L3S 4N8, Canada
info@tamilrightsgroup.org | + 1 (647) 833-2674

நடைமுறைப்படுத்தல் உட்பட, இதுவரை காலமும் தமிழர்களையும் சர்வதேச சமூகத்தையும் ஏமாற்றும் இலங்கை அரசாங்கத்தின் அரசியல் சூழ்ச்சிகள் மூலம் மழுங்கடிக்கப்பட்டுள்ளது.

ஈழத் தமிழர் தேசியப் பிரச்சினைக்கான தீர்வை நோக்கிச் செல்வதற்கு, பின்வரும் அடிப்படை நிபந்தனைகள் முதலில் திருப்திப்படுத்தப்பட வேண்டும் என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம்.

- தமிழர்களின் துன்பங்களைப் போக்கவும், நம்பிக்கையின் சூழலைக் கட்டியெழுப்பவும் பட்டியலிடப்பட்டுள்ள முக்கியமான சிக்கல்களைத் தீர்ப்பதற்கு அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் (தயவுசெய்து "அவசரமாகத் தீர்க்கப்பட வேண்டிய முக்கியமான சிக்கல்கள்" என்ற தலைப்பிலான பகுதியைப் பார்க்கவும்).

- ஐக்கிய நாடுகள் சபையின் அனுசரணையின் கீழ் இந்தியா மற்றும் சர்வதேச சமூகத்தால் ஆதரிக்கப்படும் ஒரு செயல்முறையின் மூலம் அதிகாரப் பகிர்வை நிறைவேற்ற உண்மையான அரசியலமைப்பு சீர்திருத்தத்தை மேற்கொள்ளுதல்.

- நியாயமான தீர்விற்காக எட்டப்பட்ட உடன்படிக்கைகளை, ஒப்புக்கொள்ளப்பட்ட கால அட்டவணையின்படி நடைமுறைப்படுத்துதல், ஐ.நா. மற்றும் சர்வதேச கண்காணிப்பாளர்களின் ஆதரவுடன் ஒப்பந்தங்களை அறிவித்தல்.

1987 இல் ஏற்றுக்கொள்ளப்பட்ட இந்திய-இலங்கை ஒப்பந்தத்தில் இருந்து முன்னேற்றம் மற்றும் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான ஆரம்பப் புள்ளி எடுக்கப்பட வேண்டும்.

- ஈழத் தமிழர்களுக்கு சுயநிர்ணய உரிமையை வழங்கக் கூடியதும்; அவர்களின் சொந்த எதிர்காலத்துடன் பிணைக்கப்பட்ட அபிலாஷைகளை நிறைவேற்றும் வகையிலும் வடக்கு மற்றும் கிழக்கில் வரலாற்று வாழ்விடங்களாக வரையறுக்கப்பட்ட அவர்களின் பாரம்பரிய தாயகத்தில் அவர்கள் அமைதியுடனும் பாதுகாப்புடனும் வாழ அனுமதிக்கும் அதிகாரப் பகிர்வு ஏற்பாட்டை உருவாக்க வேண்டும்.

- ஈழத் தமிழர்களுக்கான அதிகாரப் பகிர்வு ஏற்பாட்டில், நாட்டின் வடக்கு மற்றும் கிழக்கு உள்ளடங்கலான வரலாற்று வாழ்விடங்கள் இணைக்கப்பட்டுத் தனியான அலகை வரையறுக்கும் ஒற்றை மாகாணம் அல்லது தொடர்நிலப் பிராந்தியம் உருவாககப்பட வேண்டும்.

- சட்டம், மொழி, மதம், கலாசாரம், கல்வி, சுகாதாரம், நிலம், பொலிஸ், போன்றவற்றின் கொள்கைகளை நிர்ணயிக்கும் மற்றும் கட்டுப்படுத்தும்

7 Eastvale Drive, Suite 207
Markham, Ontario L3S 4N8, Canada
info@tamilrightsgroup.org | + 1 (647) 833-2674

அதிகாரத்துடன், விவசாயம், விவசாயக் கைத்தொழில், சமமான வருவாய் பகிர்வுடன் கூடிய வரி, வர்த்தகம் மற்றும் பொருளாதார மேம்பாடு இலங்கை மத்திய அரசுடன் ஒப்புக் கொள்ளப்பட்ட அரசியலமைப்பு ஏற்பாடுகளின்படி, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணம் அல்லது அவ்வாறு உருவாக்கப்பட்ட ஆட்சி அலகான அரசாங்கத்திற்கு இருக்க வேண்டும்.

- சிங்களத்துடன் தமிழ் மொழியும் உத்தியோகபூர்வ மொழியாகவும், தொடர்பாடலை எளிதாக்குவதற்கு ஆங்கிலம் இணைப்பு மொழியாகவும் இருக்க வேண்டும்.

- அனைத்து சமூகங்களையும் பாதுகாப்பதற்கும், அரசியலமைப்பு பாதுகாப்புகள் மூலம் அவர்கள் நல்லிணக்கத்துடன் வாழ்வதற்கும் பொருத்தமான அரசியலமைப்பை வடிவமைத்து உருவாக்குவதற்கு உண்மையான அரசியலமைப்பு சீர்திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும். மற்றும் ஆளுகை கட்டமைப்பில் மாகாணங்களுக்கு அல்லது தொடர்ச்சியான அலகுகளுக்கு வலுவான அதிகாரங்கள் நிர்ணயம் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

- அரசியலமைப்பு மற்றும் நீதிமன்ற அமைப்புகள் அதிகாரங்களை வரையறுப்பதற்கும் தகராறுகளைத் தீர்ப்பதற்கும் வலுவான கட்டமைப்பை வழங்குதல் வேண்டும்.

- அரசியலமைப்பு கட்டமைப்பானது தனிப்பட்ட சுதந்திரத்திற்கு உத்தரவாதம் அளிக்க வேண்டும் அத்தோடு சர்வதேச சட்டம் மற்றும் மனித உரிமைகள் மரபுகளுக்கு இணங்க அனைவரது தனி மனித உரிமைகளையும் நிலைநிறுத்துவதற்கான வலுவான ஏற்பாடுகளைக் கொண்டிருத்தலுடன் அனைத்து குடிமக்களையும் சமமாக நடத்துதலையும் உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

- ஈழத் தமிழர் தேசியப் பிரச்சினைக்கு நியாயமான தீர்வையும், இலங்கையில் நல்லிணக்கத்திற்கான நிரந்தரத் தீர்வையும் வழங்குவதற்கு சர்வதேச ஒத்துழைப்புடன் வடிவமைக்கப்பட்டு உருவாக்கப்பட்ட பொருத்தமான அரசியலமைப்பை அரசியலமைப்பு சீர்திருத்தம் வழங்க வேண்டும்.

- உருவாக்கப்பட வேண்டிய அரசியல் அமைப்பு மற்றும் அரசியலமைப்பு விதிகள் கூட்டாட்சி முறையைப் பின்பற்றி இருத்தலுடன் இலங்கையில் பல்லின சமூகத்தினரிடையே ஈழத் தமிழர்களுக்கு ஒரு நியாயமான தீர்வினை வழங்கும் வகையில் சர்வதேச ஒத்துழைப்புடன் வடிவமைக்கப்படுதல் வேண்டும்.

தமிழர் உரிமைக்கான
குழுமம்

7 Eastvale Drive, Suite 207
Markham, Ontario L3S 4N8, Canada
info@tamilrightsgroup.org | + 1 (647) 833-2674

- ஒரு இடைக்கால நடவடிக்கையாக, மேற்குறிப்பிட்டவாறு நியாயமான தீர்வொன்றை நோக்கி நகர்வதற்கான நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்கான உறுதியான தளத்தை வழங்கும் வகையில் மாகாணசபைத் தேர்தல்கள் கூடிய விரைவில் நடத்தப்பட வேண்டும்.

**அவசரமாகத் தீர்க்கப்பட வேண்டிய முக்கியமான விடயங்கள்**

மிக நீண்ட காலமாக தமிழர்கள் அனுபவித்து வரும் பாரதூரமான துன்பங்களையும், தொடரும் மனித உரிமை மீறல்களையும் போக்குவதற்கு அவசரமாக கவனிக்கப்பட வேண்டிய முக்கியமான விடயங்கள் பின்வருமாறு.

நிரந்தரமான தீர்வைக் காண்பதற்கான எந்தவொரு தீவிரமான மற்றும் உண்மையான முயற்சி வெற்றியடைய, இந்த முக்கியமான பிரச்சினைகளுக்கு இப்போது தீர்வு காணப்பட வேண்டும், இது அரசாங்கத்தின் அர்ப்பணிப்பை வெளிப்படுத்துவது மட்டுமல்லாமல்,

ஈழத் தமிழர் தேசியப் பிரச்சினைக்கு ஒரு நியாயமான தீர்வை உறுதி செய்வதற்கும் இலங்கையில் நல்லிணக்கத்தை அடைவதற்கும் தேவையான மாற்றங்களைச் செய்வதற்கான அதன் விருப்பம் பற்றிய நம்பிக்கையையும்; கட்டியெழுப்பும்

1. வடக்கு மற்றும் கிழக்கு பிரதேசங்களை இராணுவமற்ற பிரதேசங்களாக்குதல்
2. நில அபகரிப்பு மற்றும் பறிமுதல் செய்தலை நிறுத்தல்.
3. பயங்கரவாத தடுப்பு (தற்காலிக விதிகள்) சட்டத்தை (PTA) ரத்து செய்தல்.
4. அரசியல் கைதிகளை விடுவித்தல் மற்றும் வலுக்கட்டாயமாக காணாமல் போனவர்கள் பற்றிய விவரங்களை வெளியிடுதல்
5. மொழி, மதம் மற்றும் கலாச்சாரத்தின் அடிப்படையில் சமூகங்களை இலக்கு வைத்தல் மற்றும் இனத்துவேச பேச்சுக்களை ஒழித்தல்.
6. தமிழர்களுக்கான அவசரகால நிவாரணம் மற்றும் மேம்பாட்டு நிதி வழங்கல்.

***(<u>குறிப்பு:</u> மேலே உள்ள விடயங்கள் இணைப்பில் விவரிக்கப்பட்டுள்ளன)***

**நிலைமாறுகால நீதி**

நிரந்தரமான மற்றும் நிலையான தீர்வை நோக்கி நகர்வதில் நிலைமாறுகால நீதிச் செயல்முறை மறக்கப்படாமல், உண்மை மற்றும் பொறுப்புக்கூறலை உறுதிசெய்வதற்காக, ஒரு முறை நடந்தது மீண்டும் நடக்காது தவிர்ப்பது முக்கியமானதாகும்.

7 Eastvale Drive, Suite 207
Markham, Ontario L3S 4N8, Canada
info@tamilrightsgroup.org | + 1 (647) 833-2674

இலங்கையில் தண்டனையின்மை பரவலாக உள்ளது மற்றும் இலங்கையானது, ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் பல்வேறு தீர்மானங்கள் மூலம் வழங்கிய பல வாக்குறுதிகளை நிராகரித்துள்ளது என்பது அனைவரும் அறிந்ததே.

2021 இல் ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளரால் கடைசியாக வெளியிடப்பட்ட முக்கிய அறிக்கையானது இலங்கை அரசின் மீதான ஒரு மோசமான குற்றச்சாட்டாகும், மேலும் சிவிலியன் செயல்பாடுகள் இராணுவமயமாக்கப்படுவதை ஊக்குவித்து வரும் சர்வாதிகார ஜனாதிபதியின் கீழ், தொடரும் மனித உரிமை மீறல்களின் பாரதூரமான அபாயங்கள் குறித்தும் அது எச்சரிக்கிறது.

ஈழத் தமிழ் மக்களைப் பாதுகாப்பதில் இலங்கை வெளிப்படையாகத் தவறி வருவதால், மனித உரிமைகள் மரபுகள், சர்வதேச ஒப்பந்தங்கள் மற்றும் ஐ.நா.சாசனம் என்பனவற்றின் பிரகாரம் சர்வதேசச் சட்டத்தின்படி அட்டூழியக் குற்றங்கள் தடுக்கப்படுவதையும் குற்றவாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவதையும் உறுதிப்படுத்தும், “பாதுகாக்கும் பொறுப்பு” (R2P) கோட்பாட்டின் கீழ் கூட்டு நடவடிக்கை எடுக்க சர்வதேச சமூகம் கடமைப்பட்டுள்ளது.

சட்டபூர்வமான வழிமுறைகள் மூலம் இலங்கையின் குற்றவாளிகள மீதான இலக்கு வைக்கப்பட்ட தடைகள் மற்றும் பயனுள்ள நடவடிக்கையைத் தொடர சர்வதேச ஆதரவைப் பெறுவது உட்பட அரசாங்கத்தின் மீதான அழுத்தத்தைத் தக்கவைக்க இந்தியாவின் உதவியை நாங்கள் நாடுகிறோம்.

இந்த நடவடிக்கைகள் இலங்கையில் தொடர்ந்தும் தண்டனையின்றி நிகழும் பாரதூரமான மனித உரிமை மீறல்களுக்கு எதிராக நிற்கும் சர்வதேச சமூகத்தின் அர்ப்பணிப்பையும் உறுதியையும் இலங்கை அரசாங்கத்திற்கு தெளிவாக உணர்த்தும்.

## நிறைவுக் குறிப்புகள்

ஈழத் தமிழர் தேசியப் பிரச்சினைக்கு நியாயமான தீர்வைக் காணும் முகமாகவும், அவர்களின் அபிலாஷைகளை திருப்திப்படுத்தவும், இந்த மோதல்களின் மூல காரணங்களிலிருந்து எழும், அரசியல் ஓரங்கட்டுதல், அப்பாவி உயிர்களை அழித்தல், சொத்துக்களை வேண்டுமென்றே அழித்தல், தனிமனித உரிமைகளை நசுக்குதல் உட்பட, சுதந்திரம் அடைந்த காலம் முதல் 70 ஆண்டுகளாக இழைக்க்கப்பட்ட அட்டூழியக் குற்றங்களால் தோற்றுவிக்கப்பட்டுள்ள பாதுகாப்பின்மை ஆகியவற்றிற்கு அடிப்படைக்

7 Eastvale Drive, Suite 207
Markham, Ontario L3S 4N8, Canada
info@tamilrightsgroup.org | + 1 (647) 833-2674

காரணமான அவர்களின் நியாயமான குறைகளை அரசாங்கம் அங்கீகரிக்க வேண்டும்.

சிவிலியன் செயல்பாடுகளை இராணுவமயமாக்கும் ஜனாதிபதியின் சர்வாதிகார ஆட்சி மற்றும் இலங்கை எதிர்கொள்ளும் ஆற்றொணா நிதி நிலைமை ஆகியன நாட்டை மீளமுடியாமல் சீனாவின் கைகளுக்குள் தள்ளிச் செல்கிறது. இது இலங்கையில் உள்ள அனைவரின் எதிர்கால நல்வாழ்வுக்கும் பேரழிவு தரும் சூழ்நிலையை உருவாக்குவது மட்டுமல்லாமல், பிராந்தியத்தின் பாதுகாப்பு மற்றும் ஸ்திரத்தன்மைக்கு கடுமையான அச்சுறுத்தலை உருவாக்குகிறது. இந்நிலையானது இந்த நியாயமான தீர்வைக் கண்டறிவதற்கான தேவை அதிகரித்து வருகிறது,

இந்த அபாயகரமான சூழ்நிலையை நிவர்த்தி செய்ய, ஈழத் தமிழர்கள், இலங்கை மற்றும் ஒட்டுமொத்த பிராந்தியத்தின் நல்வாழ்வுக்குத் தேவையான விளைவுகளைத் தோற்றுவிக்கும் வகையில் இந்தியா மற்றும் சர்வதேச சமூகம் இலங்கை அரசாங்கத்தின் மீது அழுத்தம் கொடுக்க வேண்டும்.

ஈழத் தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கு ஒரு விரிவான மற்றும் நீடித்த தீர்வை நடைமுறைப்படுத்துவதில் இலங்கை அரசு காட்டும் உண்மையான முன்னேற்றத்தைப் பொறுத்தே அதற்கு வழங்கப்பட்க்கூடிய நிதி உதவி மற்றும் முதலீடுகள் பிணைக்கப்பட்டுப் பரிசீலிக்கப்பட வேண்டும்.

இலங்கையில் பரவி வரும் தண்டனையிலிருந்து விடுபடும் முறைமையைக் குறைக்க, இலங்கைக்கு எதிராக இலக்கு வைக்கப்பட்ட பொருளாதாரத் தடைகளும் பரிசீலிக்கப்பட வேண்டும். அதே வேளையில், இது போன்ற தடைகளால் இந்தப் போராட்டத்தில் சிக்கித் தவிக்கும் அப்பாவி மக்கள் பாதிக்கப்படாதவாறு கவனமாக இருக்கவும் வேண்டும்.

கனம் பிரதமர்அவர்களே, இலங்கையின் ஈழத் தமிழர்களைக் காப்பாற்ற அர்த்தமுள்ள நடவடிக்கைகளின் அவசியத் தேவையை மீண்டும் ஒருமுறை வலியுறுத்துகிறோம், மேலும் நியாயமான தீர்வொன்றை முன்னகர்த்துவதற்கு இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் நோக்கம் மற்றும்; இந்தக் கடிதத்தில் முன்மொழியப்பட்ட அடிப்படைக் கோட்பாடுகளுக்கு இணங்க ஈழத் தமிழர் தேசியப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இந்தியத் தலையீட்டையும் முன்னெடுக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தங்கள் உண்மையுள்ள,

**நவரத்தினம் ஸ்ரீநாராயணதாஸ்**
தலைவர், தமிழர் உரிமைக்கான குழுமம்

7 Eastvale Drive, Suite 207
Markham, Ontario L3S 4N8, Canada
info@tamilrightsgroup.org | + 1 (647) 833-2674

## இணைப்பு

### 1. வடக்கு மற்றும் கிழக்கு பகுதிளை இராணுவமயமற்றதாக்கல்

13 ஆண்டுகளுக்கு முன்னர் ஆயுத மோதல்கள் முடிவுக்கு வந்த போதிலும், இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு தமிழர் பகுதிகளில் இராணுவம் பிரசன்னம் மிக அதிக அளவில் உள்ளது, அங்கு மக்கள் சர்வதேச சட்டம் மற்றும் மனித உரிமைகள் மரபுகளை மீறும், பறிமுதல், துன்புறுத்தல், அச்சுறுத்தல் மற்றும் நில அபகரிப்பு போன்ற பிற நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

இலங்கை இராணுவம், அதி உயர் திறனைக் கொண்ட இயங்கு நிலை வீரர்களை எண்ணிக்கையில் அதிகம் கொண்டுள்ளது, இவ்வெண்ணிக்கை, உலகின் மற்றைய பல நாடுகளுடன் ஒப்பிடுகையில் விகிதாசாரத்தில் அதிகமாக உள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கில் இராணுவ வீரர்களின் செறிவு அசாதாரணமாக அதிகமாய் உள்ளது, நம்பகமான அறிக்கைகள் சில சமயங்களில் இராணுவ வீரர்களுக்கும் பொதுமக்களுக்கும் இடையிலான விகிதம் 2:1 அல்லது பல பகுதிகளில் இப் பிரசன்னம் ஒரு இராணுவ ஆக்கிரமிப்பாக மிகவும் மோசமாக உள்ளது என்று சுட்டிக்காட்டுகின்றன.

### 2. நில அபகரிப்பு மற்றும் பறிமுதல் செய்வது நிறுத்தப்பட வேண்டும்

இராணுவ மோதலுக்குப் பின்னரும் அபாயகரமான விதத்தில் நில அபகரிப்பு மற்றும் பறிமுதல்கள் நடந்து வருகின்றன. அரசாங்க அனுசரணையுடனான இராணுவம், ஆயுத மோதலின் போதும் அதற்கு முன்னும், பின்னும், ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை சுவீகரிககின்ற நில அபகரிப்புகளுக்கான காரணகர்த்தாவாக இருந்து வருகிறது.

இடம்பெயர்ந்தோர் அவர்களின் சொந்த வீடுகளுக்கு தானாக முன்வந்து திரும்புவதற்கு,இத்தகைய நில அபகரிப்புகள், எவ்வித நியாயமும் இல்லாமல், சர்வதேச சட்டம் மற்றும் மனித உரிமைகளின் மரபுகளுக்கு முரணாகக், கட்டுப்பாடுகளை விதிக்கின்றன.

தொல்பொருள் அகழ்வாராய்ச்சி; மற்றும் வனப் பாதுகாப்பு நடவடிக்கைகள் என்ற போர்வையில் பெரும்பாலும் அரசாங்க அதிகாரிகள், அரச

7 Eastvale Drive, Suite 207
Markham, Ontario L3S 4N8, Canada
info@tamilrightsgroup.org | + 1 (647) 833-2674

திணைக்களங்கள், பௌத்த மதகுருமார்கள் மற்றும் சிங்கள அரசியல்வாதிகளால் நில அபகரிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மனித உரிமைகள் மரபுகளை மீறிய நில அபகரிப்பு மற்றும் பறிமுதல்கள், ஆகியன, இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள தமிழர்களின் பாரம்பரிய தாயகத்தில் சிங்களக் குடியேற்றங்களை மேற்கொள்ளவும், மத, மற்றும் கலாச்சார முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளை அழிக்கவும்; அடுத்தடுத்து அரச கட்டிலேறிய சிங்கள அரசுகளின், முறையாகத் திட்டமிட்ட முன்னெடுப்பாகும்.

### 3. பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நீக்குதல்

மனித உரிமை மீறல்களை நிலைநிறுத்தும் கொடூரமான நடவடிக்கைகளுக்கு நன்கு அறியப்பட்ட பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டம், (PTA) ஆயுத மோதல்கள் முடிவடைந்த போதிலும் இன்னும் நடைமுறையில் உள்ளது.

இந்தச் சட்டத்தின் கீழ், விரிவான விசாரணை அதிகாரங்களை நீதித்துறையின் மேற்பார்வையின்றிப் பிரயோகிக்கக் கூடியதன் காரணமாக, இலங்கைப் பாதுகாப்புப் படைகள் தண்டனையின்றி செயல்படுகின்றன, இந்தச் சட்டம் முக்கியமாக தமிழர்களுக்கு எதிரான முழுமையான மனித உரிமை மீறல்களாக, வலிந்து காணாமல் ஆக்கபபடுதல்;, சித்திரவதை, கற்பழிப்பு மற்றும் துன்புறுத்தல்களில், பயன்படுத்தப்படுகிறது.

2015 அக்டோபரில் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 30ஃ1 தீர்மானத்திற்கு இணை அனுசரணை வழங்கியபோது, சிறந்த சர்வதேச நடைமுறைகள் மற்றும் இலங்கையின் சர்வதேச மனித உரிமைகள் சட்டக் கடப்பாடுகளுக்கு இணங்க பயங்கரவாத தடுப்புச்; சட்டத்தை மாற்றீடு செய்வதற்கான சட்டம் இயற்றுவதற்கு இலங்கை உறுதியளித்திருந்தது.

ஆதன்படி, 2018 இல் பயங்கரவாத எதிர்ப்பு மசோதா அறிமுகப்படுத்தப்பட்டது, இது இலங்கையின் பல்வேறு தரப்பினர்களின் வலுவான விவாதத்திற்கு உட்பட்டது.

இருப்பினும், இந்த மசோதா, நவம்பர் 2019 இல் நடந்த ஜனாதிபதி தேர்தலில் தற்போதைய ஜனாதிபதியின் வெற்றியைத் தாடர்ந்து 2019 டிசம்பரில் மீளப்; பெறப்பட்டது.

தற்போது முன்மொழியப்பட்டுள்ள மாற்றங்கள் பெயரளவானவையாக இருப்பதனால், வழங்கப்பட்ட வாக்குறுதியின்படி, மனித உரிமைக் கடப்பாடுகளுக்கு ஏற்ப முறையான மசோதா வரும் வரை PTA ரத்து செய்யப்பட வேண்டும் அல்லது தடை விதிக்கப்பட வேண்டும்.

7 Eastvale Drive, Suite 207
Markham, Ontario L3S 4N8, Canada
info@tamilrightsgroup.org | + 1 (647) 833-2674

### 4. அரசியல் கைதிகளை விடுவித்தல் மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் பற்றிய விவரங்களை வெளியிடல்

பயங்கரவாதத் தடைச் சட்டம் (Pவுயு) தமிழர்களையும் முஸ்லிம்களையும் காலவரையறையின்றி எழுந்தமானமாகத் தடுத்து வைக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இந்த கைதிகள் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் Pவுயு இன் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளதனால் மிகவும் பாதிக்கப்படக்கூடிய நிலையில் உள்ளனர், இது எந்த விசாரணையும் அல்லது தண்டனைக்கான முயற்சிகளும் இல்லாமல் நீண்ட காலக் காவலில் இவர்களை வைக்க அனுமதிக்கிறது.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகள் சித்திரவதை, இனரீதியான துஷ்பிரயோகம் மற்றும் பாலியல் வன்முறை போன்ற வடிவங்களில் அடிக்கடி துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்படுகின்றனர். எனப் புகழ்பெற்ற மனித உரிமை அமைப்புகள் சுட்டிக்காட்டியுள்ளன

சிறைச்சாலைகள் நிரம்பி வழிவதால், ஏராளமான கைதிகள் கோவிட்-19 தொற்றிற்கு ஆளாகியுள்ளனர், என்றும் 14 கைதிகள் வைரசால் பாதிக்கப்பட்டு இறந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இராணுவ மோதலின் போதும். ஆதற்கு முன்னரும், பின்னரும் வலிந்து காணாமல் ஆக்கப்படுதல்; ஒரு முக்கிய பிரச்சினையாக உள்ளது.

இந்த விவகாரத்தில் பணியாற்றும் ஐ.நா. செயற்குழுவின் பதிவுகளின்படி வலிந்து அல்லது விருப்பமில்லாமல் காணாமல் ஆக்கப்படுவோர் எண்ணிக்கையில் உலகின் இரண்டாவது இடத்தில் இலங்கை உள்ளது.

1980 களில் இருந்து, நம்பகமான அறிக்கைகள் 60,000 முதல் 100,000 பேர் வரை "காணாமல் போயுள்ளனர்" எனக் குறிப்பிடுகின்றன, இதில் அரசாங்கத்தின் உயர் மட்டங்கள் அனுமதித்ததாக நம்பப்படும் பயங்கரமான "வெள்ளை வேன்" கடத்தல்கள் உட்பட. பாதிக்கப்பட்டவர்கள் பலர்; அரசாங்க பாதுகாப்புப் படையினரால் கடத்தப்பட்டு, சித்திரவதை செய்யப்பட்டு கொல்லப்பட்டதாக நம்பப்படுகிறது. இந்த கடுமையான மனித உரிமை மீறல்களுக்கான நீதி, வலிந்து அல்லது விருப்பமில்லாமல் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு மறுக்கப்பட்டுள்ளது. நிரூபிக்கப்பட்டால், இவ்விடயம் மனித குலத்திற்கு எதிரான குற்றமாகும்.

7 Eastvale Drive, Suite 207
Markham, Ontario L3S 4N8, Canada
info@tamilrightsgroup.org | + 1 (647) 833-2674

**5. துவேசப் பேச்சு, மொழி, மதம் மற்றும் கலாச்சாரத்தின் அடிப்படையில் சமூகங்களை இலக்கு வைப்பதை மற்றும் ஒழித்தல்**

தமிழ் சமூகம் பல தசாப்தங்களாக, இலங்கை அரச இயந்திரத்தின் சிங்கள-பௌத்த தேசியவாத அரசியல் தலைவர்களின் உதவி மற்றும் ஆதரவுடன் பாகுபாடு, இன இழிவு, துன்புறுத்தல் மற்றும் மிருகத்தனமான வன்முறைகளை அனுபவித்து வருகிறது.

முஸ்லீம் எதிர்ப்பு உணர்வின் வளர்ச்சியால், சுமார் 2013 முதல், முஸ்லிம் சமூகமும் குறிவைக்கப்பட்டு வருவதனால் முஸ்லீம் சமூகத்திலும் உச்சக்கட்டமாக அதே வன்முறை நடத்தப்படுகிறது. இது அரசாங்கத்தின் சொல்லாடல்களாலும் கொள்கைகளாலும் தூண்டப்பட்டுச், சில சமயங்களில் வெளிப்படையாக முஸ்லிம்களை குறிவைக்கிறது.

"ஒரே நாடு ஒரே சட்டம்" என்ற பிரேரணைக்கான செயற்குழுவுக்கு, தீவிரவாத போக்குள்ள பௌத்த பிக்குகளில் ஒருவரான கலகொட அத்தே ஞானசாரரை தலைவராக நியமித்துள்ளமையும் மற்றும் அப்பிரேரணை சார்ந்த தற்போதைய ஜனாதிபதியின் பகிரங்க அறிக்கைகளும், இலங்கையிலும் வெளிநாடுகளிலும் பலரை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

**6. தமிழர்களுக்கான அவசரகால நிவாரணம் மற்றும் மேம்பாட்டு நிதி**

பல தசாப்தங்களாக நீடித்த இராணுவ மோதல்கள் வடக்கு மற்றும் கிழக்கின் பகுதிகளை அழித்தொழித்துள்ளது, இந்தப் பகுதிகள் இலங்கையின் மற்ற பகுதிகளை விட மிகவும் பின்தங்கியுள்ளன.

தொழிற்சாலைகள் மற்றும் உள்கட்டமைப்புகளின் அழிவு ஏற்பட்டுள்ளதுடன் சாதாரண மக்கள் தங்கள் வாழ்வாதாரத்திற்காக நம்பியிருக்கும் பண்ணைச் செய்கை, விவசாயம், மற்றும் மீன்பிடித்தொழில் ஆகியன கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன

இலங்கையில் உள்நாட்டுப் போர் முடிந்து ஏறக்குறைய ஒரு தசாப்தத்திற்குப் பிறகும், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் முக்கிய சமூக மற்றும் பொருளாதார நடவடிக்கைகளில் கணிசமான அளவில் பின்தங்கியுள்ளன.

தமிழ் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு இல்லாதது அவர்களை பெரும் மன உளைச்சலுக்கு உள்ளாக்கியுள்ளது. இந்த நிலை முதியோர்களையும், ஒட்டுமொத்த சமூகத்தையும் பாதிக்கிறது, இதனால் ஏராளமான மக்கள் வாழ்வதற்கே போராடுகிறார்கள். இந்த சூழ்நிலையில் அவசர நிவாரணம் மற்றும் அபிவிருத்தி நிதிகள் அவசரமாக வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளுக்கு வழங்கப்பட வேண்டும்.